செ.வெ. எண்: 777 நாள்: 22.12.2011

## பத்திரிகைக் குறிப்பு

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அறிவுரையின்படி வணிக வரி அலுவலர்கள் முழுமையாக கவனம் செலுத்தி கூடுதல் வரி வசூல் செய்யும் பொருட்டு, மாண்புமிகு வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 22.12.2011 அன்று சென்னையில் வணிக வரித் துறை அலுவலர்களின் பணிகளை ஆய்வு செய்தார்கள்.

ஆய்வின்போது திரு. சுனீல் பாலீவால், இ.ஆ.ப., செயலர், வணிக வரி மற்றும் பதிவுத் துறை மற்றும் திரு. ஹேமந்த் குமார் சின்ஹா, இ.ஆ.ப., முதன்மை செயலர் / வணிக வரி ஆணையர் உடன் இருந்தனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 08.07.2011–ல் நடந்த முந்தைய ஆய்வு கூட்டத்தில், ஜுன் 2011 வரை மொத்த வளர்ச்சி விகிதம் 20.04 சதவிகிதமாகவும், மேலும் நவம்பர் 2011 வரை மொத்த வளர்ச்சி விகிதம் 22.95 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. மேலும், நவம்பர் 2011 வரை உள்ள வரி வசூல் ரூ.25,055 கோடியானது முந்தைய ஆண்டு வரி வசூல் தொகை ரூ.20,378 கோடியை காட்டிலும் 22.95 விழுக்காடு அதிகரித்துள்ளது. இந்நிலை தொடர்ந்து நீடிக்க விருப்பபடுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ்வருட முடிவிற்குள் நிர்வாகத்தினை முடுக்குவதன் மூலம் ரூ.41,000 கோடி வரி வசூல் தொகையினை எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

01.01.2011 முதல் செயல்படுத்தப்பட்டு வரும் சமாதான திட்டத்தின் கீழ் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம் ஆகியவைகளின் கீழ் நிலுவையாக உள்ள நிலுவைத் தொகையினை அதிகபட்சமாக வரி வசூல் செய்திட அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வலுவான தலைமையின் கீழ் பொதுமக்களுக்கு வீட்டு உபயோகத்திற்கு பயன்படும் LPG எரிவாயு, உரங்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் ஆகியவைகளுக்கு வரி விலக்கு அளித்ததன் மூலம் பல்வேறு வகையான நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்திலுள்ள அனைத்து வணிகவரி உயர் அலுவலர்கள் கலந்து கொண்ட இப்பணித் திறனாய்வு கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வரி வசூல், மாதாந்திர நமூனாக்கள் தாக்கல் செய்தல், செயலாக்கப்பிரிவின் ஆய்வு மற்றும் திடீர் தணிக்கைப் பணிகள், வணிகர்களின் பதிவுகள், பின் தங்கிய வரி விதிப்பு இனங்களை முடித்தல், வரி நிலுவைகளை வசூலித்தல் மற்றும் தெருத் தணிக்கை செய்தல் ஆகியவற்றினை கூர்ந்தாய்வு செய்து, பணிகளை சிறப்பாக செய்து முடித்திட அறிவுரைகள் வழங்கினார்.

இம்மாநிலத்தின் மொத்த வருவாயில் ஏறத்தாழ 70 விழுக்காடு வணிக வரிகளின் மூலம் பெறப்படும் வருவாயாக உள்ளதால், துறை அலுவலர்கள் வரி வசூலில் தனி கவனம் செலுத்தவேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள். அரசு பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை அமல்படுத்த திட்டமிட்டுள்ளதால் வணிக வரித் துறை மூலம் பெறப்படும் வருவாய் உயர்த்தப்பட வேண்டுமென்றும், அதே நேரத்தில் வரி செலுத்துவோரின் நல்லுறவை வளர்க்கும் வண்ணம் துறையின் நடவடிக்கைகள் அமைவதை துறை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும் எனவும், வணிகர்களை துன்புறுத்தக் கூடாது எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியபடி தகவல் தொழில் நுட்பம் இத்துறைக்கு அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக, ரூ.230 கோடி, மென்பொருள் மற்றும் வன்பொருள் முறையினை அபிவிருத்தி செய்ய அரசு ஏற்றுக் கொணடுள்ளது.

செயலாக்கப்பிரிவின் மூலமாக வரி ஏய்ப்பை தடுப்பதற்காகவும், அரசு வருவாய் அதிகரிக்கவும், இத்துறையானது பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. பெத்திகுப்பத்தில் ஒருங்கிணைந்து தணிக்கைச்சாவடி அமைப்பதற்கு முடிவுகள் அரசால் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், வணிகவரித் துறை செயலாக்கப்பிரிவு அலுவலர்களுக்கு கையடக்க முனையம் வழங்குதல் மற்றும் தணிக்கைச்சாவடி உள் கட்டமைப்புகள் போன்ற முக்கிய நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகவல் தொழில் நுட்பத்தினை துறையில் பெருமளவு பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்கள். மேலும், துறையின் நடவடிக்கைகள் சிறப்பாக செயல்பட தேவையான வசதிகளை அரசு செய்து தரும் என உறுதியளித்தார்கள்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**